தூது
நற்செய்தி துணுக்குகள்

சி. எஸ். ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# மேலானவைகளை
## நோக்கி

"பூமியிலுள்ளவைகளையல்ல,
மேலானவைகளையே நாடுங்கள்."

- கொலோசேயர் 3:2



ஜூன் - 2026
(மடல் - 26) செய்தி - 6

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 1 |
| ஆயரம்மா மடல் | 3 |
| பெண்கள் பகுதி | 5 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 20 |
| கோதுமை மணி | 23 |
| துணுக்குகள் | 25 |
| ஆலய பக்கம் | 27 |

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

மேலானவைகளை நோக்கி (Looking Toward Higher Things) மனித வாழ்க்கை வெறும் பூமிக்குரியவைகளுக்காக மட்டுமே உருவாக்கப்படவில்லை. கடவுள் மனிதனை உயர்ந்த நோக்கத்திற்காக படைத்தார். ஆனால் உலகம் மனிதனை கீழான சிந்தனைகளிலும், தற்காலிக ஆசைகளிலும் கட்டிப்போட முயற்சிக்கிறது. உணவு, உடை, வசதி, புகழ் போன்றவை வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே. ஆனால் வாழ்க்கையின் உண்மையான அர்த்தம் கடவுளோடு இணைந்து பயணிப்பதிலிருக்கிறது. ஆனால் வேதாகமம் நம்மை மேலானவைகளை நாடும்படி அழைக்கிறது.

**"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" - கொலோசெயர் 3:2**

### 1. மேலானவரை நோக்கி வாழ அழைப்பு

மனிதன் பலரால் பாதிக்கப்படுகிறான். சமூகமும், ஊடகங்களும், உலகத்தின் குரலும் மனிதனின் மனதை வழிநடத்துகின்றன. ஆனால் எல்லாவற்றையும் தாண்டி, உண்மையான மாற்றத்தை மனிதனாகிய நமக்குள் ஏற்படுத்துகிறவர் இயேசு கிறிஸ்துவே. இயேசுவின் வாழ்வில் வெறும் போதனைகளால் மட்டுமல்ல, தன்னுடைய செயல்பாட்டிலும் மனிதர்களின் இதயங்களை மாற்றி, அவர் அன்பினால் மனிதர்களை இழுத்தார்: "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்." - யோவான் 12:32. பேதுரு ஒரு சாதாரண மீன்பிடிப்பவராக இருந்தபோதிலும் இயேசுவின் சந்திப்பிற்கு பின்பு பேதுருவின் வாழ்வின் பயணமானது முற்றிலும் மாறியது. "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மத்தேயு 4:19. இயேசுவின் அழைப்பு பேதுருவின் தொழிலை மட்டுமல்ல, அவரது நோக்கத்தையும் மாற்றியது. நம்முடைய வாழ்விலும் மேலானவைகளை நாடிச்செல்ல மேலானவரை நோக்கி வாழும் அழைப்பை உறுதிப்படுத்துவோம்.

### 2. மேலான சத்தத்தை கேட்க அழைப்பு

இன்றைய உலகம் சத்தங்களால் நிரம்பியுள்ளது. ஆனால் அந்த சத்தங்களின் நடுவில் கடவுளின் மென்மையான குரலை அதாவது அவருடைய வார்த்தையைக் கேட்பது ஆன்மீக வளர்ச்சியின் அடையாளமாகும். கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது – சங்கீதம் 29:4. எலியா தீர்க்கதரிசி பயத்திலும், சோர்விலுமிருந்தபோது கடவுள் அவரை ஓரேப் மலையில் சந்தித்தார். கடவுளுடைய வார்த்தை எலியாவின் வாழ்விலிருந்து பயத்தை நீக்கி, சோர்வுகளை மாற்றி, காத்தருடைய வார்ததையின்படி செயல்படுவதற்கு ஆற்றலை ஏற்படுத்தியது. நம்முடைய வாழ்விலும் கடவுளுடைய மேலான சத்தத்தை கேட்கிற அனுபவத்தை ஏற்படுத்திக் கொண்டு நல்ல

மேய்ப்பர் இயேசுவின் சத்தத்தை கேட்டு அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து வாழும்போது கடவுள் நம்முடைய வாழ்வில் ஏற்படுகின்ற பயம், கலக்கம், துன்பம், பாடுகள் எல்லாவற்றிலுமிருந்து நீக்கி, சோர்வை போக்கி நமக்கு வேண்டிய புதிய
பெலனைத் தருகிறது. “நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.” – யோவான் 6:63.

### 3. மேலானவருக்காக வாழ அழைப்பு

ஆராதனை என்பது பாடல்கள் பாடுவது மட்டுமல்ல. அது மனிதனின் முழு வாழ்க்கையையும் கடவுளுக்காக அர்ப்பணிப்பதாகும். “நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்.....இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை - ரோமர் 12:1. ஏசாயா தீர்க்கன் கடவுனுடைய சந்நிதியில் நின்றபோது, தனது அசுத்தத்தை உணர்ந்தார். ஏனெனில் கடவுள் பரிசுத்தர். கடவுள் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை –1யோவான்1:5,3:5. எனவே அவருடைய தூய இரத்தத்தால் பாவமன்னிப்பை பெற்றுக்கொண்ட நாமும் பாவகறையற்ற மக்களால் வாழ நம்மை ஒப்புக்கொடுப்பதோடு மட்டுமின்றி அவருடை அறைகூவலை உணர்ந்து (யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் -ஏசாயா6:8). நம்மையும், நம்முடையவைகளையும் மேலானவருடைய சேவையை செய்திட நம்மை அர்ப்பணித்திட வேண்டும். (“இதோ, அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும்.”-.ஏசாயா 6:8).

கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு சாதாரண பயணம் அல்ல. அது உயரங்களை நோக்கிச் செல்லும் பரிசுத்தமான அழைப்பாகும். இந்த உலகம் கீழானவற்றை நோக்கி இழுத்தாலும்,கடவுள் தம்முடைய ஜனங்களை மேலானவற்றை நோக்கி செயல்பட தூண்டுகிறவர். அவருடைய உதவியோடு பரிசுத்தமாய் வாழ்ந்து, அவருடைய சத்தத்திற்கு செவி கொடுத்து, உண்மையுள்ள சீடராக வாழும்போது நிச்சயமாய் இவைகளிலும் பெரிதானவைகளைப் பெற்றுக்கொள்வோம்.

கடவுள் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : esp.rgt@gmail.com*

**இவண்**
**கிறிஸ்துவின் திருபணிவிடையாளன்**
**அருள்திரு.S.பிரபுதாஸ்**

## குழப்பத்தில் ரெபெக்காளின் ஜெபம்

**ஆதியாகமம் 25:21-23**

ரெபெக்காள் ஒரு சாதாரண பெண் அல்ல. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உடன்படிக்கை குடும்பத்தில் வந்திருந்தாலும், அவளுடைய வாழ்க்கையில் ஒரு மறைந்த கண்ணீர் இருந்தது. அது "பிள்ளையின்மை" என்ற அமைதியான வேதனை. நாட்கள் கடந்தன... மாதங்கள் கடந்தன... ஆண்டுகளும் நகர்ந்தன... ஆனால் கர்ப்பத்தின் ஆசீர்வாதம் திறக்கப்படவில்லை. ஆனாலும் ரெபெக்காள் நம்பிக்கையை இழக்கவில்லை. மனிதர்கள் முடியாது என்ற இடத்தில், கடவுள் தொடங்குவார் என்பதை அவள் அறிந்திருந்தாள். அதனால் தான் அவள் ஜெபத்தின் பாதையைத் தேர்ந்தெடுத்தாள். அவளுடைய வாழ்க்கையில் ஜெபம் ஒரு கடமையாக அல்ல. அது ஒரு போராட்டம். அது ஒரு கண்ணீரின் மொழி. அது கடவுளின் மீதுள்ள ஆழான விசுவாசம்.

### 1. ஜெபத்தின் தாக்கம்

ரெபெக்காளின் ஜெபம் வெறும் தனிப்பட்ட ஆசீர்வாதத்தை மட்டுமே உண்டாக்கவில்லை. அது வரலாற்றையே மாற்றியது. அவள் கருவில் இருந்த இரண்டு குழந்தைகள் இரண்டு இனமாக மாறப்போகிறார்கள் என்று கடவுள் வெளிப்படுத்தினார். ஜெபம் கடவுளுடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறது. மனிதன் காணாததை, ஜெபம் காண உதவுகிறது. மூடிய கர்ப்பத்தை திறந்தது மட்டுமல்ல. மூடிய எதிர்காலத்தையும் திறந்தது. "அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்". சங்கீதம்:91:15. ஒரு பெண்ணின் மௌன ஜெபம், ஒரு தலைமுறையின் பாதையை மாற்ற முடியும்.

### 2. ஜெபத்தின் மேன்மை

ரெபெக்காள் கடவுளை "விசாரித்தாள்" என்று வேதாகமம் கூறுகிறது. அதாவது அவள் பதிலைத் தேடினாள். வேதனையை மட்டும் சொல்லவில்லை. கடவுளுடைய சித்தத்தையும் அறிய விரும்பினாள். இது சாதாரண ஜெபமல்ல. இது கடவுளோடு

ஐக்கியத்தை ஏற்படுத்திய ஜெபம். பலர் ஆசீர்வாதத்தைத் தேடுகிறார்கள். ஆனால் சிலரே கடவுளுடைய விருப்பத்தைத் தேடுகிறார்கள். "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." எரேமியா 29:13. ரெபெக்காளின் ஜெபம், சந்தேகத்தின் நடுவிலும் விசுவாசத்தை பிடித்துக் கொண்ட ஜெபம். அவள் காத்திருந்தாள்...அவள் விசாரித்தாள்... அவள் நின்றுவிடவில்லை. அது மனித விருப்பத்தை மீறி கடவுளுடைய விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.

**3. ஜெபத்தின் வல்லமை**

ரெபெக்காளின் ஜெபம் கர்ப்பத்தைத் திறந்தது. அவளுடைய ஜெபம் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தியது. அவளுடைய ஜெபம் எதிர்கால இராஜ்ய வரலாற்றை உருவாக்கியது. நம்முடைய ஜெபம் அமைதியாய் இருக்காது. அது கடவுளை செயல்பட உந்த வைக்கிறது. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." யாக்கோபு 5:16. ஒரு பெண்ணின் கண்ணீர் ஜெபம், கடவுளுடைய அரியாசனத்தைத் தொட முடியும். எதிர்கால தலைமுறையையும் ஆசீர்வதிக்க முடியும். இன்றும் நம்மில் பலர் கதவுகள் மூடப்பட்டிருக்கின்றன என்று குழப்பத்தில் இருக்கலாம். ஆனால் ரெபெக்காளின் வாழ்க்கை ஒரு உண்மையை அறிவிக்கிறது: நம்முடைய ஜெபத்திற்கு முடிவு வராதிருக்கலாம், அல்லது கடவுள் தாமதிக்கலாம். ஆனால் நமக்குரிய எந்த நன்மையும் ஒருபோதும் தவறுவதில்லை. காத்திருக்கும் விசுவாசம் வெட்கப்படாது! "கர்த்தரை நோக்கிக் காத்திருக்கிறவர்கள் புதுப் பெலன் அடைவார்கள்." எசாயா 40:31. வேதனை வந்தாலும் ஜெபத்தை விடாதே. பதில் தாமதித்தாலும் விசுவாசத்தை கைவிடாதே. இராக்காலத்தில் எழுந்த ஜெபம், விடியற்காலத்தில் சாட்சியாக மாறும்.

**இறைபணியில்**
**ஆ. ஜெஸிந்தா பிரபுதாஸ்**
**ஆயர் அம்மா**

# பார்வை மாறினால் பாதை மாறும்

**மேலானவைகளை நாடுங்கள்** என்பது இந்த உலகப் போராட்டங்களுக்கு மத்தியில் ஒரு விசுவாசி தன் வாழ்க்கையை எப்படி வழிநடத்த வேண்டும் என்பதற்கான திசைகாட்டி ஆகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் 3:2-ல் குறிப்பிட்ட **"மேலானவைகளையே நாடுங்கள்" (பூமியிலுள்ளவைகளையல்ல)** என்ற உண்மையை, புதிய ஏற்பாட்டில் **பேதுரு கடலின் மேல் நடந்த சம்பவத்தோடும்**, பழைய ஏற்பாட்டில் **யோசேப்பின் வாழ்க்கையோடும்** நாம் மிக அழகாகத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.

தன் பார்வையை "மேலானவற்றில்" வைக்கும்போது ஒரு மனிதன் எப்படி அற்புதங்களைச் செய்கிறான், அதே பார்வை "கீழே" திரும்பும்போது எப்படி வீழ்ச்சியடைகிறான் என்பதை இவர்களின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தருகிறது.

### 1. பேதுரு கடலின் மேல் நடத்தல்: பார்வையின் திசையும் விசுவாசமும்

**மேலான பார்வை:** இயேசுவைக் கண்ட மாத்திரத்தில் பேதுரு (மத்தேயு 14:28-31) "ஆண்டவரே, நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக்கட்டளையிடும்" என்றார். இயேசு "வா" என்றவுடன், பேதுரு படகை விட்டு இறங்கி, தண்ணீரின் மேல் நடந்து இயேசுவினிடத்தில் போனார். இந்தத் தருணத்தில் பேதுருவின் பார்வை, இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட **"மேலான"** காரியமாகிய இயேசுவின் மீது மட்டுமே இருந்தது. அதனால் அவரால் தண்ணீரில் மூழ்காமல் நடக்க முடிந்தது.

இந்தச் சம்பவம், நம்முடைய பார்வை எங்கே இருக்க வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.




**பூமிக்குரிய பார்வை:** ஆனால், அடுத்த வசனம் சொல்கிறது: *"காற்றின் பலத்தைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்..."* என்று. பேதுரு தன் பார்வையை இயேசுவிடமிருந்து திருப்பி, கீழே இருந்த அலைகளையும், சுற்றியிருந்த பெரும் காற்றையும் (பூமிக்குரிய சவால்களை) பார்த்தார். எப்போது பார்வை கீழே திரும்பியதோ, அப்போதே அவர் அமிழ்ந்து போகத் தொடங்கினார்.

★ நம்முடைய பார்வை "மேலானவராகிய" இயேசுவின் மீது இருக்கும் வரை, உலகப் பிரச்சனைகள் என்னும் கடலின் மேல் நம்மால் விசுவாசத்தோடு நடக்க முடியும். சவால்களை நோக்கி நம் பார்வை திரும்பும்போது, நாம் அமிழ்ந்து போவோம்.

**2. யோசேப்பின் வாழ்க்கை: சூழ்நிலைகளைத் தாண்டிய பரலோகப் பார்வை**

யோசேப்பின் வாழ்க்கை என்பது, பூமியில் தனக்கு நேர்ந்த எல்லா அநீதிகளுக்கு மத்தியிலும், தன் பார்வையை எப்போதும் மேலான தேவ திட்டத்தின் மீது மட்டுமே வைத்திருந்த வாழ்க்கையாகும். (ஆதியாகமம் 37-50).

**உலகப் பார்வையை மறுத்தல்:** தன் சொந்த சகோதரர்களால் விற்கப்பட்டு, போத்திபாரின் வீட்டில் அடிமையாகி, செய்யாத குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப்பட்டபோதும் யோசேப்பு சோர்ந்து போகவில்லை. அவன் பூமியிலுள்ள சூழ்நிலைகளைப் பார்த்திருந்தால், கசப்பும் கோபமும் அடைந்திருப்பான். ஆனால் அவனோ, "நான் எப்படி இந்தப் பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வேன்?" (ஆதியாகமம் 39:9) என்று தேவனை நோக்கிய பார்வையில் உறுதியாய் இருந்தான்.



**மேலான திட்டத்தைப் புரிந்துகொள்ளுதல்:** பிற்காலத்தில் எகிப்தின் அதிபதியாக உயர்ந்த போது, தன்னை விற்ற தன் சகோதரர்களை அவன் பழிவாங்கவில்லை. மாறாக, *"நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள் தேவனோ... அதை நன்மையாக முடியப்பண்ணினார்"* (ஆதியாகமம் 50:20) என்று கூறினான்.

★ யோசேப்பு பூமியின் குறுகியப் பார்வையோடு தன் கஷ்டங்களைப் பார்க்கவில்லை. மாறாக, தேவனின் மேலான, உன்னதமான இரட்சிப்பின் திட்டத்தையே எப்போதும் நோக்கிக் கொண்டிருந்தான். அதனால்தான் அவனால் மன்னிக்கவும், உயர்த்தப்படவும் முடிந்தது.

நம்முடைய வாழ்க்கையிலும் பேதுருவைப் போல அலைகளையோ, யோசேப்பைப் போலச் சிறைச்சாலைகளையோ நாம் சந்திக்கலாம். ஆனால், நம் பார்வை பூமியின் தற்காலிகப் போராட்டங்களில் இல்லாமல், **"மேலானவைகளின்"** மீது இருக்கும்போது, தேவன் நம்மை அமிழ்ந்து போகாமல் காத்து, சரியான பாதையில் நடத்தி, உன்னத நிலைக்கு உயர்த்துவார்.

**ஜெபசீலி ஆசீர்**




# யாபேசின் தாய்

**1 நாளாகாமம் 4:9,10**

நாளாகமப் புஸ்தகத்தில் இஸ்ரவேலின் வம்ச வரலாற்றுப் பட்டியலின் நடுவில் பெயர் அறிவிக்கப்படாத ஒரு பெண் மறைமுகமாக விளக்கப்பட்டுள்ளாள். அவள், தான் அனுபவித்த துக்கத்தை தன் பிள்ளையின் மேல் காண்பித்தாள். துக்கம் என்று அர்த்தம் கொள்ளும் “யாபேஸ்” என்று பெயரிட்டாள். அந்த குழந்தையோ தன் மீது சுமத்தப்பட்ட துக்கத்தை ஏற்க மறுத்தான். அவன் வாழ்வில் முன்னேற அவன் போராட வேண்டிய விதம் வித்தியாசமானது என்பதை அறிந்திருந்தான். 1நாளா.4:9.10 சொல்கிறது, யாபேஸ் தன் சகோதரரைப் பார்க்கிலும் கனம் பெற்றவனாயிருந்தான் என்று. நாமும் கனம் பெற்றவர்களாகக் காணப்படவேண்டும். யாபேஸ் ஜெபித்த நான்கு காரியங்களைப் பார்ப்போம்.

**இஸ்ரவேலின் தேவனை நோக்கி விண்ணப்பித்தான்**

நமது பார்வை யார்மேல் உள்ளது? யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கிப் பார்த்தான். நமது கண்களும் எல்லா சூழ்நிலைகளிலும், அவரை நோக்குகிறதாய் இருக்க வேண்டும்.

1. **தேவரீர் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்**

   நம்மை ஆசீர்வதிப்பதே அவருக்கு பிரியம், நாம் தேவனை சார்ந்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். தேவனிடத்தில் கேட்க வேண்டும். அப்போது நம் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி அவர் தருவார்.

2. **தேவரீர் என் எல்லையைப் பெரிதாக்க வேண்டும்**

   நம் வாழ்வில் பல எல்லைகள் உள்ளன. அவைகள் பெரிதாக வேண்டும். வாழ்வில் துக்கங்களை, கசந்த அனுபவங்களை நமக்கு தந்த நபர்களை மன்னிக்கும் எல்லை பெரிதாக வேண்டும். நமது பிள்ளைகளிடத்திலும், மற்றவர்களிடத்திலும் கசந்து கொள்ளாமல் தேவ அன்பை காண்பிக்கும் எல்லை பெரிதாக வேண்டும். வேத வசனங்க்களை சார்ந்திருக்கும் எல்லை சுகத்தின் எல்லை, சம்பத்துக்களின் எல்லை, பிள்ளைகளின் வாழ்வில் நல்ல அம்சங்களின் எல்லைகள் பெரிதாக வேண்டும். விசுவாசத்தோடு எல்லாவற்றிற்கும் ஜெபிக்கும் ஜெப எல்லை, அழைந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக செயல்படும் செயல்பாட்டு எல்லை பெரிதாக வேண்டும். இதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

3. **உமது கரம் என்னோடிருக்க வேண்டும்**
   கர்த்தருடைய கரம் நம்மோடிருக்கும்போது நாம் எந்த சூழ்நிலையையும் எளிதாக சந்திக்கலாம். அவருடைய பலத்த கரத்தின் கீழ் பாதுகாப்புண்டு, அடைக்கலம் உண்டு, அரவணைப்புண்டு.

4. **தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கி காத்தருளும்**
   சில நேரங்களில் அநேக ஆசீர்வாதங்கள் இருந்தாலும், தீங்கு நம்மை சந்தித்தால் அது நம்மை துக்கப்படுத்தும். பகை, வியாதி, சமாதானக் கேடுகள், தோல்விகள், நஷ்டம் இப்படிப்பட்ட தீங்குகள் நம்மை துக்கப்படுத்தாதபடி தேவன் காக்க ஜெபிப்போம். நம் நேசர் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்! கர்த்தர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு துக்கங்களை சுமந்தார். எனவே நாம் சுமக்க தேவையில்லை. எந்த பாதையில் கடந்து போய் கொண்டிருந்தாலும், அவருடைய பாதத்தில் வைப்போம். கருத்தாய் ஜெபிப்போம். விசுவாசத்தோடு ஜெபிப்போம். அவர் நம்மை ஆசீர்வதிப்பார், அவர் நம் எல்லையை பெரிதாக்குவார், அவர் கரம் நம்மோடிருக்கும், தீங்கு நம்மையும் நம் குடும்பத்தையும் துக்கப்படுத்தாதபடி காப்பார்! நம் துக்கத்தை மற்றவர்களிடம் காண்பிக்க வேண்டாம்......

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**


ஜூலை & ஆகஸ்டு மாத தலைப்பு

**நிலையான விசுவாசத்தை நோக்கி**

***Towards Steadfast Faith***

Dear Children,

The theme this June is "**SET YOUR MIND ON THINGS ABOVE**".





This means we should think about God, His ways, and what pleases Him, more than the things of the world.

It means children ought to keep Jesus first in their thoughts, choices, and actions.

## DAILY APPLICATION

1. **Think About Jesus Every Day**: Children can remember Jesus by praying, reading the Bible, and thanking Him daily – Heb. 12:2




2. **Choose What Is Good and Kind:** Setting our minds above means choosing kindness, honesty, love, and obedience instead of wrong behavior.
   "Whatever is true, whatever is noble… think about such things." Phil. 4:8
3. **Remember Heaven Is Our Real Home**: The world is temporary, but God's kingdom lasts forever. Phil 3:20


## Set your mind on things above [Zac Poonen Illustration]

https://www.youtube.com/watch?v=mw5Ya5z1-kc


The Lord calls me to lift my gaze to the skies,
For God's eternal truths never wither or die.
Though the world tempts with treasures that gleam,
I seek the Lord's path, not an earthly dream.

God, remind me each day of heaven's worth,
Where treasures last, untouched by the earth.
Lord, I fix my mind on things unseen,
For only through You, Lord, am I redeemed.

## SAYING IT WITH PICTURES…





In reply Jesus declared, "I tell you the truth, no one can see the kingdom of God unless he is born again." – JOHN 3:3 NIV




You adulterous people, don't you know that friendship with the world means enmity against God? Therefore, anyone who chooses to be a friend of the world becomes an enemy of God. – JAMES 4:4 NIV

## BOOKS OF THE BIBLE #6: JOSHUA



**Author**: Joshua


**When It Happened**: 1452–1420 BC

**Chapters**: 24

**Key People**: Joshua; Rahab

**Summary**: The people were prepared to enter the Promised Land. Moses had died, and Joshua was the new leader. The land would be theirs, as God had promised. But it would not be easy.

The book of Joshua tells of the many battles against the wicked nations that were necessary in order to take the land. It was clear after the first battle at Jericho that God would help them if they were obedient to Him and did what He commanded.





Once the land was conquered, Joshua divided it among the tribes of Israel.

**About God**: God is powerful and sovereign. His strength and power will go before all who walk in His name.

## TINY TOTS SECTION

### COLOR IN...



## The Best Path

When we try to live the gospel and put the most important things first, we are blessed! Follow the path of scriptures to help the boy get to church.




## Talent Match

Our talents can bless others. Match these children with one of the talents they have. What are your talents? How can you use them to serve others?



# A New Way to Live

**INSTRUCTIONS:** Circle the better choice in each pair.




# Put Away or Put On?

**INSTRUCTIONS:** Write each word from the word bank in the correct column based on Colossians 3:8 and 3:12

| Put Away | PUT ON |
|---|---|
| | |

compassion anger kindness humility
hatred gentleness lies filthy language patience

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "SET YOUR MIND ON THINGS ABOVE"

1. What should believers set their minds on? (Col. 3:2)

a. Earthly Treasures. b. Things above.
c. Riches. d. Popularity.

2. Where is a Christian's citizenship? (Phil 3:20)

a. Rome. b. Heaven.
c. Israel. d. Earth.

3. Jesus told His followers to store treasures in ______________? (Matt.6:20)

a. Banks. b. Homes.
c. Heaven. d. Cities.

4. What did Peter say believers should prepare? (1 Peter 1:13)

a. Houses. b. Armies.
c. Minds. d. Crown.

5. In Philippians 4:8, believers are urged to think about things that are _________,

a. Evil. b. Fearful.
c. Pure. d. Temporary.

6. Who did the author of Hebrews tell believers to fix their eyes on? (Heb. 12:2)

a. Moses. b. Angels.
c. Jesus. d. Kings.

7. Solomon said, "everything on earth without God is _________." (Ecc. 1:2)

a. Perfect. b. Joyful.
c. Eternal. d. Meaningless.

8. What did Jesus say comes first? (Matt. 6:33)

a. Wealth. b. Comfort.
c. God's Kingdom. d. Success.

9. What kind of transformation comes by renewing the mind? (romans 12:2)

a. Physical. b. Spiritual.
c. Emotional. d. Social.

10. According to 2 Corinthians 4:18, believers focus on what is ________.

a. Seen. b. Temporary.
c. Eternal. d. Expensive.

11. What did Jesus say a person gains by following Him? (John 3:16))

a. Silver. b. Eternal Life.
c. Fame. d. Power.

12. According to Psalm 119:11, what should believers' treasure?

a. God's Word b. Wisdom. c. Gold. d. Money

## Jesus Teaches a Pharisee

There was a Pharisee who had questions for Jesus. He came to Jesus at night. What was his name?

In each box, write the missing letter.




| | |
|---|---|
| ☐ | JKLMO |
| ☐ | GHJKL |
| ☐ | BDEFG |
| ☐ | NPQRS |
| ☐ | BCEFG |
| ☐ | BCDFG |
| ☐ | JKLNO |
| ☐ | STVWX |
| ☐ | OPQRT |




Jesus told Nicodemus, "No one can enter the kingdom of God unless they are ...



Use the code to find the answer.



Jesus gave Nicodemus an important message. What was it?

Unscramble these words to find John 3:16.

"____ ____ ____ ____
rFo dGo os veldo

____ ____ ____ ____
eth rwodl htta eH

____ ____ ____ ____
vgea siH eno dna

____ ____, ____
ylon noS hatt

____ ____
whoveer seveileb

____ ____ ____ ____
ni mHi alshl otn

____ ____ ____
erpish tbu evha

____ ____."
etrenal feli




Use the Morse code to find the answer.

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| .- | -... | -.-. | -.. | . | ..-. | --. | .... | .. | .--- | -.- | .-.. | -- |

| N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| -. | --- | .--. | --.- | .-. | ... | - | ..- | ...- | .-- | -..- | -.-- | --.. |



____ ____
- ---

____ ____ ____ ____
... .- ...- .

____ ____ ____
- .... .

____ ____ ____ ____ ____
.-- --- .-. .-.. -..

____ ____ ____ ____ ____ ____ ____
- .... .-. --- ..- --. ....

____ ____ ____!
.... .. --

# EYES SET ON HEAVEN

**https://www.instagram.com/reel/DAudtkRyZnd/**



Bartholomaeus Ziegenbalg

Bartholomeus Ziegenbalg was one of the first Protestant missionaries to South India. He arrived in the town of Tarangambadi in 1706.

Ziegenbalg had a deep desire to share the gospel with Tamil-speaking people. He believed every person deserved to hear God's Word in their own tongue.

Once some powerful officials opposed his ministry and even put him in prison. But he did not allow suffering to stop God's work. Soon he completed one of the earliest Tamil translations of the New Testament. In recognition of his selfless service, a stamp was released in his name




Ziegenbalg's life reflected Colossians 3:2 — "Set your minds on things above." He cared more about God's kingdom and the spiritual growth of people than about comfort, freedom, or praise from others.


<u>Now What?</u>


After you become a Christian, you belong to Jesus forever.
Here are some things you can do to grow as a Christian and please Jesus.

Look up each verse, read it, and draw a line to what it describes.


| | |
|---|---|
| Acts 19:5 | pray  |
| Psalm 1:2 | study the Bible  |
| 1 Thessalonians 5:17 | tell people about Jesus  |
| Hebrews 10:25 | spend time with other Christians  |
| Acts 1:8 | be baptized to show you belong to Jesus  |

# PARABLE DECODED #6: KINGDOM PARABLES



## What Can You Do for Someone Today?




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of June is: ______________________________.
2. _________________ wrote the book of Joshua.
3. Phil 4:8 says - ________________________________________________________

   ______________________________________________________________________

   ______________________________________________________________________
4. ______________________________was one of the first Protestant missionaries

   to ________________. He arrived in the town of ____________________in _____.

**Dear Children, let us set our eyes, hands, mind and hearts to the things above. Let us continue to run the race till the crown is won.**

**God bless,**

**Mrs. Briliya Jeyaseelan**

# Answers to May Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "SERVE GOD AND MAN"

1. b. God.
2. b. Neighbor.
3. a. Joshua.
4. b. Servant.
5. b. People.
6. c. Samaritan.
7. b. Serves.
8. b. Stewards.
9. b. Orphans.
10. b. Me.
11. c. Good.
12. b. Dead.

## Complete the Short Review Below…

5. The theme for the month of May is: **Serve God and Man**.
6. **Moses** wrote the book of Deuteronomy.
7. 1st John 3:18 says - **Dear children, let us not love with words or speech but with actions and in truth.**
8. Matthew 25:40 says - **The King will reply, 'Truly I tell you, whatever you did for one of the least of these brothers and sisters of mine, you did for me**.
9. This month, the missionary we learnt about was **David Livingstone**.



Note : Submit *hard copy* of the answers of Bible Quiz *to* Pastor uncle *or aunty on or before 25th* of every month.

Kindly avoid sending answers via WhatsApp.



# வேத வினாக்கள்

## ஆதியாகமம் முழுவதும்

(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. உலகத்தில் முதல் வேட்டைக்காரன் யார்?
2. தேவனோடு நடந்த மனிதன் யார்?
3. சகோதரனை வெள்ளிக்காசுக்கு விற்றவர்கள் யார்?
4. தன் பிறப்புரிமையை உணவிற்காக விற்றவன் யார்?
5. கனவில் ஏணியை கண்டவர் யார்?
6. சிரித்ததால் பெயர் பெற்றவன் யார்?
7. பெண்ணைப் பார்த்து “என் சகோதரி“ என்றவன் யார்?
8. தகப்பனின் நிர்வாணத்தை பார்த்தவன் யார்?
9. கல்லை தலையணையாக்கி தூங்கியவன் யார்?
10. வானத்தைத் தொட கோபுரம் கட்ட நினைத்த இடம் எது?
11. தன் மனைவியைப் பற்றி பொய் சொல்லி பயந்தவன் யார்?
12. தன் சகோதரனின் இரத்தம் பூமியிலிருந்து கூப்பிட்டவன் யார்?
13. இரவில் தேவனோடு போராடியவன் யார்?
14. கண்களைத் திறந்தபோது நிர்வாணம் தெரிந்தவர்கள் யார்?
15. ஆசீர்வாதத்தை திருட உதவிய தாய் யார்?
16. தன் கனவால் சகோதரர்களின் வெறுப்பை சம்பாதித்தவன் யார்?
17. உப்புத்தூணான பெண் யார்?
18. கப்பலில் அல்ல, பேழையில் உலகத்தை காத்தவன் யார்?
19. தகப்பனின் ஆசீர்வாதத்திற்காக தோல் போர்த்தியவன் யார்?
20. சகோதரனால் அல்ல, மிருகத்தால் கொல்லப்பட்டதாக நினைக்கப்பட்டவன் யார்?
21. மனிதன் பெயரிடாத முதல் பெண் யார்?
22. தன் வீட்டிலிருந்து வெளியேறி கூடாரங்களில் வாழ்ந்த விசுவாசி யார்?
23. சிரித்ததற்காக கண்டிக்கப்பட்ட பெண் யார்?
24. ஒரு இரவிலே செல்வந்தனான அடிமை யார்?
25. கனவுகளை விளக்கி அரசருக்கு அருகில் நின்றவன் யார்?

## மே மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | இருப்பிடம் |
|---|---|---|
| 1 | ஐந்து | 1சாமு.17:40 |
| 2 | ஐந்து | யோசுவா 10:5-10 |
| 3 | ஐந்து | யோவான் 4:18 |
| 4 | ஐந்து | மத்தேயு 25:2 |
| 5 | ஐந்து | ஆதியாகமம் 43:34 |
| 6 | ஐந்து | 1கொரி.14:19 |
| 7 | ஐந்து | யோவான் 5:2 |
| 8 | ஐந்து | மத்தேயு 25:15 |
| 9 | ஐந்து | யாத்திராகமம் 13:18 |
| 10 | ஐந்து | ஆதியாகமம் 47:2 |
| 11 | ஐந்து | எண்ணாகமம் 27:1 |
| 12 | நான்கு | யாத்திராகமம் 6:23 |
| 13 | ஐந்து | 2 கொரி. 11:24 |
| 14 | ஐந்து | நியாயாதிபதிகள் 18:2 |
| 15 | ஐந்து | யோசுவா 13:3 |

குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.

தயவுசெய்து WhatsApp மூலம் பதில்களை அனுப்புவதை தவிர்க்கவும்.

## மே மாத வேத வினாக்களுக்கான பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs. Adela Ezra
3. Mrs.Desigta Jaison
4. Mr.Emmanuel (Ruwais)
5. Mrs.Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Helen Sharmila Ray
8. Mrs.Hema RajaGuru
9. Mr.Jeba Jino
10. Mrs.Jasmine Sobha
11. Mrs.Jebaseeli Asir
12. Mrs.Dr. Jenila Gannraj.L
13. Mrs.Jacqulin Rani
14. Mr.Joslin Ananth .N
15. Mr.Jo Ernast
16. Mr.John .H [Ruwais]
17. Mrs.Kishi Maher
18. Mrs. Malar Ernast
19. Mr.Merlin Jeba Kinis
20. Mrs.Nandhini Rajkumar
21. Mrs.Padma Brin
22. Mrs.Praveena Arun (Ruwais)
23. Mr.Prawin Durai Sam (Ruwais)
24. Mrs.Priya Ranjith Kumar
25. Mrs.Persis John
26. Mrs.Peppin Jenson
27. Mr.Raja Guru Sekar
28. Mrs.Sarah Manuel
29. Mr.Salin Robert
30. Mrs.Sheeba Merlin
31. Mrs.Sheeba Herlin
32. Mrs.Sheneegah Stanly
33. Mrs.Sharmila Rajesh
34. Mrs.Selvi George
35. Mr. Selva Shaji
36. Mrs. Subija Jino
37. Mrs.Sweetilin Frank
38. Mrs. shobana Milton
39. Mrs. Suni Smila Edwin
40. Mrs.Valentine Sharmila Paul
41. Mrs. Vithya Dinesh
42. Mr. Ramesh Rajan
43. Mr. Ramesh Rajan

## Children who answered May – 2026 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Alton kim Kinis
4. Albern
5. Aleina
6. Andrea kim Kinis
7. Anana Natalie
8. Benson Immanuel Raj
9. Brightson Timothy Raj
10. Clement Dave
11. Daniel Vanya (RUWAIS)
12. Danion Lemuel
13. Defina
14. Diyas Dinesh
15. Effrin
16. Efrona
17. Eion Jayden
18. Eric Jayden
19. Evangelia Sharon
20. Evaniya Sherin
21. Evelyn Loria V
22. Elize Glora Alfred
23. Gabrilyn Hannah
24. Giana Elin
25. Hadriel Adventier
26. Jadon Darius Ruwais]
27. Jabree Aaron
28. Janey Titus
29. Jarick Aaron
30. Jaslin Shanna
31. Jaylan Paul Jino
32. Jeffrey Samuel
33. Jen Scudd
34. Jenessa Johnson
35. Jerilyn Pushpam Nelson
36. Jessica Eban
37. Jevlyn Ana
38. Jeya Jehosheba Maher
39. Jim Scott
40. Joanna Paul Jino
41. Joel Abrakam
42. Joha Anit Manuel
43. Johan Sam Manuel
44. Johanan Paul Jino
45. Keren Tessa
46. Kathryn Joan
47. Kavi yalini
48. Kavin Immanel
49. Kev Shannen P.S(Ruwais)
50. Leona Juliet
51. Leonel I.J. Stalin
52. Liana Erin
53. Linuel I.J. Sherwyn
54. Mark Jayden
55. Mishael Wesley
56. Nashley Vinod Kiran
57. Pristina samlynPrince
58. Rivqah Deby Rajkumar
59. Sam Jesvin Vincent
60. Selvajesvin (Ruwais)
61. Sherlyn Sana (Ruwais)
62. Starlyne Noble
63. Steffi Priscilla .R
64. Yedidiah Arun (Ruwais)
65. Yovaan jairus (Ruwais)
66. Hadassah Gracelin Arunkumar -Ruwais



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**எருசலேமில் .......**

ஆப்கானிஸ்தானிலிருந்து எருசலேமுக்கு வந்த சேர்ந்த தோமா, அங்கு ஊழியம் செய்து வந்த அப்போஸ்தலர்கள் மற்றும், விசுவாசிகளை சந்தித்து, அவர்களுடன் தனது ஊழிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அதைக் கேட்ட அனைவரும் தோமாவின் கைகளினால் கர்த்தர் செய்த அற்புதங்கள், அடையாளங்கள் ஆகியவற்றிற்காகவும், ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டதற்காகவும் கர்த்தரைத் துதித்தனர்.

தோமாவிடம் அவரது ஊழிய அனுபவங்களை விபரமாகக் கேட்டறிந்த லூக்கா சுவிசேஷத்தை எழுதிய, 'லூக்கா' அப்போஸ்தல நடபடிகளை எழுதியதைப் போல, தோமாவின் ஊழியங்களைப் பற்றி, 'தோமாவின் நடபடிகள்' என்கிற பெயரில் தனியொரு நிருபமாக எழுதினார்.

பின்பு தோமா, எருசலேமை ஆண்ட சவுல் அரசனின் வம்சத்தினருக்கு சுவிசேஷத்தைப் போதித்தார். அவர்களில் அநேகர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

**பிற தேசங்களில் .............**

அரேபியா தேசங்கள், எத்தியோப்பியா தேசம் மற்றும் ஏமன் தேசத்தில் சுவிசேஷத்தை பிரசங்கித்தார் தோமா. இவர்களில் சிலர் வணிகத்தின் நிமித்தமாக எருசலேமில் கூடியிருந்த போது பேதுருவின் மூலமாக சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிருந்தனர். பவுலும் பல நாட்கள் அரபு தேசங்களில் தங்கியிருந்தார். தோமா இந்த தேசங்களில் எங்கும் சுவிசேஷத்தை முழு முயற்சியோடு அறிவித்து, அங்குள்ள

விசுவாசிகளை கர்த்தருக்குள் திடப் படுத்தினார். பழங்குடி இன மக்களில் அனேகர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றினர்.

வியாதியஸ்தர்களை தோமா சுகமாக்கி, பல்வேறு அற்புத அடையாளங்களை நிகழ்த்தி, அதன் மூலமாக 'இயேசுவே தெய்வம்!' என்று முழக்கமிட்டார். அற்புதங்களைக் கண்ட அநேகர், தோமாவின் மூலம் கேட்ட வசனத்தை விசுவாசித்து இயேசுவண்டை வந்தனர். அவர்களில் சிலர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட காரணத்திற்காக துன்புறுத்தப்பட்டனர். அதினிமித்தம் அவர்களில் பலர் அண்டை நாடுகளுக்கு சென்று அடைக்கலம் பெற்றனர்.

**இந்தோனேஷியாவில் ...........**

சொகோட்டிரா தீவில் தனது ஊழியத்தை நிறைவேற்றிய தோமா, அங்கிருந்து 40 நாட்கள் கப்பலில் பயணம் செய்து, இந்தியப் பகுதியான கேரளாவிலுள்ள 'மல்லியங்கரா' என்கிற ஒரு தீவிற்கு கி.பி.50ம் ஆண்டு டிசம்பரில் வந்து சேர்ந்தார். பிறகு அங்கிருந்து சென்னைக்குச் சென்று, கப்பலில் இந்தோனேஷியா நாட்டிற்குச் சென்றார்.

அந்த தேசத்திலுள்ள 'பாராகுயான்' என்கிற ஒரு தீவிற்குச் சென்ற தோமா, கால்நடையாகவே கிராமங்கள்தோறும் சென்று, அங்குள்ள பழங்குடியின மக்களுக்கு நற்செய்தி அறிவித்தார். மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அநேக அற்புதங்களைச் செய்து, அநேகரை நோயின் பிடியிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலையாக்கினார். திரள் கூட்ட ஜனங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் இடமளித்தனர்.

கி.பி. 17ம் நூற்றாண்டில் அங்கு ஊழியம் செய்த ஆஸ்திரிய தேசத்தைச் சேர்ந்த மிஷனெரி மார்ட்டின் என்பவர், அத்தீவில் முதன்முதலாக பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவனைச் சந்தித்தபோது, தோமா தங்களுடைய முற்பிதாக்களுக்கு இயேசு கிறிஸ்துவை அறிவித்து அவர்களை கர்த்தருக்குள் வழி நடத்தியதாக அவரிடத்தில் சொன்னான்.

அதேபோல கி.பி.19ம் நூற்றாண்டில் அத்தீவில் ஊழியம் செய்த மூண்டோயா என்பவரிடத்தில் பழங்குடியின மக்கள், தோமா, 'இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்!" என்றும், அவர் தங்கள் முன்னோரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார் என்றும், அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஆராதித்த இடத்தில் சிலுவை ஒன்றை தோமா வைத்துச் சென்றதாகவும் சொன்னார்கள்.

பாராகுயான் தீவிலுள்ள சுரங்கம் ஒன்றில் பணி செய்த சிலர், அங்குள்ள மலையிலுள்ள சில பாறைகளில் பழங்கால எழுத்துக்கள் பதிக்கப்பட்டு இருப்பதைக் கண்டனர். அவைகளை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், அது இயேசு கிறிஸ்து பேசிய அராமைக் மொழியாகவோ அல்லது பழங்கால எபிரேய மொழியாகவோ இருக்கலாம் என்று கருதினர். அதே சமயத்தில், அங்குள்ள பழங்குடியின மக்களில் சிலர், அந்த எழுத்துக்கள் தோமாவால் கற்களில் செதுக்கப்பட்டவை என்று கருதினர்.

- **தொடரும்**




**நல் மீட்பரே, உம்மேலே [பாமாலை 307]**
**(I lay my sins on Jesus)**

**1. நல் மீட்பரே, உம்மேலே**
**என் பாவம் வைக்கிறேன்;**
**அன்புள்ள கையினாலே**
**என் பாரம் நீக்குமேன்;**
**நல் மீட்பரே, உம்மேலே**
**என் குற்றம் வைக்க, நீர்**
**உம் தூய ரத்தத்தாலே**
**விமோசனம் செய்வீர்**

**2. நல் மீட்பரே, உம்மேலே**
**என் துக்கம் வைக்கிறேன்**
**இப்போதிம்மானுவேலே**
**எப்பாடும் நீக்குமேன்**
**நல் மீட்பரே, உம்மேலே**
**என் தீனம் வைக்க நீர்**
**உம் ஞானம் செல்வத்தாலே**
**பூரணமாக்குவீர்**

***'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'. யோவான் 1:29***

இப்பாடலை எழுதிய ஹோரேஷியஸ் போனர் (Horatius Bonar) 1808ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 19ம் தேதி ஸ்காட்லண்ட் நாட்டில் எடின்பரோ நகரில் (Edinburgh, Scotland) பிறந்தார். அவரது முன்னோர்களில் பலர் போதகர்களாகப் பணியாற்றியவர்கள். அவரது தாயார் சிறந்த தெய்வபக்தியும் தூய்மையான வாழ்க்கையும் உள்ளவராதலால், அவர்களது மூன்று பிள்ளைகளான ஜான், ஹோரேஷியஸ், ஆன்ட்ரூ என்பவர்கள் கிறிஸ்தவ சன்மார்க்க நெறியில் வளர்க்கப்பட்டு, பிற்காலத்தில் போதகர்களாகப் பணி செய்தனர். ஹோரேஷியஸ், எடின்பரோ நகரிலுள்ள உயர்நிலைப்பள்ளியில் தாமஸ் சால்மர்ஸ் என்னும் புகழ்பெற்ற தலைமை ஆசிரியரின் கீழ் கல்வி பயின்றார். இவ்வாசிரியரின் மிகச்சிறந்த போதனை, ஹோரேஷியஸின் ஆத்தும வளர்ச்சிக்கு மிகவும் தூண்டுதலாய்

இருந்தது. பின்னர், அவர் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, கல்லூரிப் படிப்பை முடித்து, லீத் நகரத்தில் தூய யோவான் ஆலயத்தில் தம் திருப்பணியை ஆரம்பித்தார். ஓய்வுநாள் பள்ளி ஊழியத்தில் விசேஷக் கவனம் செலுத்தி, சிறுவர்களுக்கேற்ற பாடல்கள் எழுதி, அவற்றை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். 1837ல் தமது முப்பதாவது வயதில் குரு அபிஷேகம் பெற்று, கெல்ஸோ (Kelso) என்னுமிடத்தில் சபைக் குருவாகப் பணியாற்றினார். சுமார் முப்பது ஆண்டுகள் கெல்ஸோவில் பணியாற்றிய பின், எடின்பரோ நகருக்கு மாற்றப்பட்டு, ஸ்காட்லாண்டிலுள்ள சுய ஆளுகைச் சபைகளின் (Free Church of Scotland) ஐக்கியத்திற்காக வெகுவாக உழைத்தார். இச்சேவைக்காக 1883ல் அவர் அச்சபையின் பிரதம குரு (Moderator) என்னும் உயர் பதவியைப் பெற்றார். அவரது வாழ்க்கையில் அவருக்குப் பல துன்பங்கள் நேர்ந்தன. அவரது பிள்ளைகளில் ஐந்துபேர் இளவயதிலேயே இறந்தனர். அவர் மரிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னமே அவரது மனைவியும் மறுமைக்குள் சென்றார்.

"நல் மீட்பரே, உம்மேலே" என்னும் இப்பாடல், நியாயத்தீர்ப்புநாளின்போது மட்டுமல்ல, மாறாக ஒவ்வொரு முறை நாம் பாவச்சேற்றில் சிக்கிக் கொள்ளும் போதும், ஆண்டவரிடம் நம் பாவங்களை அறிக்கையிட்டுச் சேர வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அறுநூற்றுக்கும் அதிகமான பாடல்களை எழுதிய போனர், முதன்முதலில் எழுதியது "நல் மீட்பரே, உம்மேலே" என்னும் இப்பாடல்தான் என்றும் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தப் பாமாலைக்கு, 'சபையின் அஸ்திபாரம்' பாடலுக்கு வழங்கப்பட்ட Aurelia என்னும் ராகமும் பொருத்தமானது. அநேக திருச்சபைகளில் Aurelia ராகத்திலும் இது பாடப்படுகிறது.

இப்பாடலைத் தவிர அவர், ஏராளமான பாடல்களும், ஆங்கிலச் செய்யுள்களும் எழுதியுள்ளார். அவர் எழுதிய இதர பாடல்களில் புகழ்பெற்றவை:

'வா, பாவி, இளைப்பாற வா'
- பாமாலை 284

'மயங்கும் தாசனை தேவா, நீர் நடத்தும்'
– பாமாலை 325

'நிரப்பும் என்னைத் துதியால்'
– பாமாலை 374

அவர் 1889ம் ஆண்டு, ஜூலை மாதம் 31ம் தேதி தமது 81வது வயதில் எடின்பரோ நகரில் மறுமைக்குட்பட்டார்.

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள்

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 5 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.45 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 7 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 9 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 12 | வெள்ளி | 6.30 pm – 8.15 pm | Junior Church |
| | | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 14 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 16 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 19 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 21 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 23 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 26 | வெள்ளி | 8.45 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 30 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| | | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள்

| | |
|---|---|
| **05-06-26** | |
| பாமாலை – 22 | தூய, தூய, தூயா! |
| பாமாலை – 249 | நல் மீட்பர் பட்சம் நில்லும் |
| கீர்த்தனை – 210 & 156 | சத்திய வேதத்தைத் தினம்<br>ஐயையா, நான் வந்தேன் – தேவ |
| பாமாலை – 35 | எங்கள் ஊக்க வேண்டல் கேளும் |
| **12-06-26** | |
| பாமாலை – 175 | ஆதியில் இருளை |
| பாமாலை – 319 | உன் நெஞ்சிலே உண்டான |
| கீர்த்தனை – 189 & 306 | என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்<br>இம்மட்டும் ஜீவன் தந்த |
| கீர்த்தனை – 6 | சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம் |
| **19-06-26** | |
| பாமாலை – 2 | உம்மை துதிக்கிறோம், யாவுக்கும் |
| பாமாலை – 370 | என்தன் ஆத்ம நேசரே |
| கீர்த்தனை – 180 & 99 | ஆதாரம் நீ தான் ஐயா<br>ஆவியை அருளுமே சுவாமீ |
| கீர்த்தனை – 4 | சீர்திரியேக வஸ்தே நமோ நமோ |
| **26-06-26** | |
| பாமாலை – 14 | அநாதியான கர்த்தரே |
| பாமாலை – 207 | கர்த்தாவின் தாசரே |
| கீர்த்தனை – 224 & 229 | தாசரே, இத்தாரணியை அன்பாய்<br>வீராதி வீரர் யேசு |
| கீர்த்தனை – 8 | தந்தாய்! உம்மைத் துதித்தே |




| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **05-06-26** | இயேசு: முழுநிறை தாக்கத்தை ஏற்படுத்துபவர் | 2நாளா. 20:13-19 | அப். 18:24-28 | யோவான் 8:12-20 | 89:19-37 |
| **12-06-26** | படைப்பின் கூக்குரல்: இயற்கையின் வழியாக கடவுளின் சத்தத்தை உணருதல் | யோபு 12:7-12 | வெளி. 22:1-5 | லூக்கா 12:24-34 | 19 |
| **19-06-26** | வழிபாடு: கடவுளின் திருப்பிரசன்னத்தையும், திருத்திட்டத்தையும் அறிதல் | ஏசாயா 6:1-8 | அப். 2:42-47 | மாற்கு 12:28-34 | 100 |
| **26-06-26** | சீடத்துவம்: வந்து பாருங்கள், சென்று அறிவியுங்கள் | சகரியா 8:18-23 | ரோமர் 10:9-17 | யோவான் 1:39-42 | 66 |




| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **02-06-26** | நீதிமொழிகள் | 30:1-10 | Tourist Club |
| **09-06-26** | நீதிமொழிகள் | 30:11-20 | Al Wadha |
| **16-06-26** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **23-06-26** | நீதிமொழிகள் | 30:21-33 | Hamdan |
| **30-06-26** | நீதிமொழிகள் | 31:1-9 | Muroor |

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Evelyn Gracia. R |
| 1 | Mr. | Salin Robert Samuel |
| 2 | Mrs. | Vanitha Mani Inbakumari |
| 3 | Ms | Dafflin D M |
| 4 | Mrs. | Sathya |
| 4 | Mrs. | Bala Nancy P |
| 4 | Mr. | Yabez Raj |
| 5 | Mr. | Andrew Jones Arun |
| 5 | Mr. | Johnson Sagayaraj |
| 6 | Mr. | Rajesh T |
| 6 | Mrs. | K. Nithya Prince |
| 6 | Mrs. | Sweetlin Selwyn |
| 7 | Mr. | Ashok Raj Kumar |
| 7 | Mr. | Samuel Solomon |
| 8 | Master | Juda |
| 9 | Mrs. | Brini Chandran. S. B |
| 10 | Mr. | Prabudoss |
| 11 | Mr. | Julian John |
| 11 | Mr. | Samuel Prakashraj. R |
| 12 | Mrs. | Pansy Sophia |
| 13 | Mrs. | Shalini |
| 13 | Mr. | Manuel Yesudian |
| 13 | Mr. | Jacob Jerald Ponselvan |
| 13 | Mr. | Jo Ernast D |
| 14 | Ms. | Manuel Yesudial |
| 14 | Master | Adriel Augustin Issac |
| 14 | Ms. | Gabriela Augustin Issac |
| 15 | Mr | Allwin Emmanuel Packianathan |
| 15 | Mr. | Johnson Prabu |
| 15 | Mrs. | Denslin Rufus |
| 16 | Dr.Mrs. | Briliya Jeya Seelan |
| 16 | Mrs. | Helen Paul |
| 16 | Miss. | Keziah Grace |
| 16 | Mrs. | Jainie Janet Jenitta Abraham |

# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 18 | Mr. | Abryan Gabriel Jeyaseelan |
| 18 | Mr. | Vasanth Dhanapaul |
| 18 | Master | Nivaan Tarkash Sunil |
| 18 | Master | Abishek Jason J |
| 19 | Mrs. | Savitha |
| 20 | Mrs. | Suganthi Selvin |
| 20 | Master. | Daniel Vanya |
| 20 | Baby | Athira Thiyagu |
| 20 | Mr. | Japa Kumar. C. S |
| 20 | Baby | Jyrus Lionel |
| 21 | Mr. | Titus Kennerth |
| 23 | Mr. | Vigin Cv |
| 23 | Mrs. | Alice Jennifer |
| 23 | Mr. | Jegan Mahesh |
| 24 | Mr. | Joel Mart |
| 24 | Mr. | Johnson Ramesh Kumar |
| 24 | Mrs. | Christabel Jemila |
| 25 | Mrs. | Aggnet Lionel |
| 25 | Master | Johan Lionel |
| 26 | Mr. | Solomon Susinder |
| 26 | Mr. | Godwin Mohan |
| 26 | Mrs. | Selvamalar Raviraj |
| 27 | Mrs. | Blessy Kripalani |
| 27 | Mrs. | Jeba Victoria J |
| 28 | Mr. | Rejin Raj Manuel. R |
| 28 | Ms. | Jabree Aaron |
| 29 | Ms. | Jerilyn Pushpam |
| 29 | Mr. | Rajkumar |
| 29 | Mr | Jayaraj Robinson |
| 29 | Miss. | Atarah Janina E |
| 29 | Master | Jezron J |
| 30 | Mr. | Jeyakumar |

ஆலயப் பக்கம்

# HAPY ANNIVERSARY!

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 4 | Mrs. & Mr. | Richard Samuel Jothi |
| 6 | Mrs. & Mr. | Sasi Kumar |
| 6 | Mrs. & Mr. | Arun Samuel |
| 11 | Mrs. & Mr. | Jeya Mahear |
| 13 | Mrs. & Mr. | Raja Singh |
| 21 | Mrs. & Mr. | Max Jeevin |
| 26 | Mrs. & Mr. | Arul Mozhi Varman |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்





| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Jenit | 517 |
| 2 | Mr. Abish | 518 |
| 3 | Mr. Jeffin J Harris | 519 |
| 4 | Mr. Jai Sam Daniel | 520 |
| 5 | Mr. Joshua Amos Sam | 521 |
| 6 | Mr. Jones Allen Sam | 522 |
| 7 | Mr. Ebenezer Relton | 523 |
| 8 | Mr. Anish Raja | 524 |

## Farewell to
## Rev. Dr.A.Samuel & Family



## Welcome
## Rev. Prabu Doss & Family




நித்திய இலக்கை நோக்கி
நடந்து செல்
வானத்தில் நமக்காக காத்திருக்கும்
மகிமையை நினைவில் கொள்
இந்த
உலகத்தின்
கவர்ச்சியல்ல,
வானத்தின்
நிரந்தர மகிமையை
நோக்கி வாழ்வோம்.
ஜெயத்திலும் தியானத்திலும்
தேவனை நாடு
அன்பிலும் சேவையிலும்
கிறிஸ்துவைப் பின்பற்று
வேத வாசிப்பின் மூலம்
ஞானத்தில் வளரு
வேத வார்த்தையை தினமும்
நேசி